**ஜனவரி – 18**

# TNPSC துளிகள்

❖ இந்தியக் கடற்படைக்கான இரண்டாவது பல்நோக்குக் கப்பலான INS உத்கர்ஷ் என்ற கப்பல் சென்னைக்கு அருகிலுள்ள காட்டுப்பள்ளி கப்பல் கட்டும் தளத்தில் அறிமுகப் படுத்தப் பட்டது.

❖ ஆந்திரப் பிரதேச அரசு ஆனது, இந்தியாவின் முதல் தனியார் குறைக்கடத்தி உற்பத்தி மையத்தினை அமைப்பதற்காக என இண்டிசிப் செமிகண்டக்டர் லிமிடெட் நிறுவனம் மற்றும் அதன் ஜப்பான் இணை நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.

❖ 6 கிலோ மீட்டர் வரம்பிலான தொலைவிற்குள் உள்வரும் இணை/கூட்டு ஆளில்லா வான்வழி வாகனங்களின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்காக வடிவமைக்கப் பட்ட பார்கவாஸ்த்ரா என்ற உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட முதல் குறு எறிகணை அமைப்பை இந்தியா மிகவும் வெற்றிகரமாக ஒடிசாவின் கோபால்பூரின் பரிசோதித்து உள்ளது.

❖ காங்கிரஸ் கட்சியானது, முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் நினைவாகப் பெயரிடப்பட்ட, புது டெல்லியில் அமைக்கப்பட்டுள்ள இந்திரா பவன் எனப்படும் புதிய காங்கிரஸ் தலைமையகத்தினைத் திறந்து வைத்துள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

### சர்வதேச பலூன் திருவிழா 2025




❖ 10வது தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழாவானது (TNIBF) பொள்ளாச்சி நகரத்தில் சமீபத்தில் நடத்தப் பட்டது.

- TNIBF ஆனது குளோபல் மீடியா பாக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து மாநில சுற்றுலாத் துறையினால் நடத்தப்படுகிறது.
- இது நாட்டின் ஒரே வருடாந்திர வெங்காற்று மிதவை/பலூன் விழாவாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- இந்த விழாவில் ஐக்கியப் பேரரசு, பிரான்சு, ஆஸ்திரியா, பிரேசில், பெல்ஜியம், ஜப்பான், தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய சுமார் எட்டிற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 10க்கும் மேற்பட்ட வெங்காற்று மிதவைகள் இடம் பெறுகின்றன.

## காசி தமிழ் சங்கமம் 3.0




- மூன்றாவது காசி தமிழ்ச் சங்கமம் (KTS) ஆனது தமிழ்நாட்டிற்கும் காசி நகர்த்திற்கும் இடையிலான காலத்தால் அழியாத பிணைப்புகளைக் கொண்டாடுகிறது.
- இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆனது தமிழ்நாட்டிற்கும் காசிக்கும் இடையிலான பழங்காலத் தொடர்புகளைக் கொண்டாடுதல், மறு உறுதிப்படுத்துதல் மற்றும் மீளுருவாக்குதலை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மூன்றாவது பதிப்புக் கொண்டாட்டமானது, இந்தியாவின் பெரும் மதிப்புமிக்க முனிவர்களில் ஒருவரான அகஸ்தியரின் மரபினை நன்கு கொண்டாடும் விதமாகக் கொண்டாடப் படுகிறது.

# தேசியச் செய்திகள்

## IMD அமைப்பின் தொலைநோக்குத் திட்டம்-2047

- இந்திய வானிலை ஆய்வுத் துறையின் (IMD) தொலைநோக்குத் திட்டம்-2047 ஆவணம் பிரதமரால் வெளியிடப்பட்டுள்ளது.
- 2047 ஆம் ஆண்டிற்குள் கிராமம் மற்றும் வீடுகளில் அனைத்து வகையான மிகவும் கடுமையான வானிலையையும் மிகவும் முழுமையான சதவீத அளவில் கண்டறிந்து, அத்தகைய நிகழ்வுகளினால் ஏற்படும் உயிர் இழப்பு எண்ணிக்கையினை சுழியாகக் குறைப்பதை இந்தியா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வானிலைத் துறையானது, மூன்று நாட்கள் வரையில் முழுமையான துல்லியத்துடனும், ஐந்து நாட்கள் வரையில் 90 சதவீதத் துல்லியத்துடனும், ஏழு நாட்கள் வரையில் 80 சதவீதத் துல்லியத்துடனும், 10 நாட்கள் வரையில் 70 சதவீதத் துல்லியத்துடனுமான முன்னறிவிப்பை வழங்குவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- இது தொகுதி மற்றும் பஞ்சாயத்து நிலைகளில் அனைத்து கடுமையான வானிலை

நிகழ்வுகள் குறித்த முன்னறிவிப்பு இலக்குகளையும் உள்ளடக்கியுள்ளது.

❖ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் மேற்கொள்ளப்படும் பல முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு, அடுத்த இரண்டு ஆண்டுகள், அடுத்த 10 ஆண்டுகள் (2035 ஆம் ஆண்டிற்குள்) மற்றும் அடுத்த 22 ஆண்டுகள் (2047 ஆம் ஆண்டிற்குள்) ஆகிய பல ஆண்டுகளுக்கான இலக்குகளையும் இது குறிப்பிட்டுக் காட்டுகிறது.


❖ பிரதமர் அவர்கள் 150 நினைவு ரூபாய் நாணயத்தினையும் மற்றும் இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தபால் முத்திரையையும் வெளியிட்டார்.

❖ 2025 ஆம் ஆண்டு குடியரசுத் தின அணிவகுப்பில் IMD ஆனது முதன்முறையாக அதன் சொந்த அணிவகுப்பு காட்சி வாகனத்தினைக் காட்சிப்படுத்த உள்ளது.

**KEY GOALS UNDER IMD VISION 2047**

- **Global leadership** | Attain recognition as a leading meteorological agency at the global level
- Exporting instruments to meet the global demand
- Substantial improvement in quality, accuracy & efficiency in service delivery and forecast accuracy
- Use of UAVs for surface and boundary layer meteorological observations
- Setting up one million observations at voluntary homes (neighbourhood meteorological network)
- Involvement of all stakeholders in weather reporting (aviation, railways, power, wind and solar farms)
- Setting up 300 electronic sensors-based observatory
- Using mobile weather station; application of AI/ML; application of robotics
- Utilisation of energy from waste to power all surface observatories and automated stations
- Implementation of advanced algorithms and data analytics for real-time lightning detection and prediction systems
- Precise observations and continuous monitoring to map sea-level rise
- Constant observations of glacier monitoring and hydrological data

## தேசிய மஞ்சள் வாரியம்




❖ தெலங்கானாவின் நிஜாமாபாத்தில் தலைமையகத்துடன் கங்கா ரெட்டி என்பவரை அதன் முதல் தலைவராகக் கொண்டு தேசிய மஞ்சள் வாரியம் (NTB) ஆனது திறக்கப் பட்டுள்ளது.

❖ 'தங்க மசாலா பொருள்' என்று அழைக்கப்படுகின்ற மஞ்சள் ஆனது, மகாராஷ்டிரா,

தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, மத்தியப் பிரதேசம், மேகாலயா மற்றும் பிற பகுதிகளில் பரவியுள்ளது.

- NTB ஆனது அந்த மாநிலங்களின் நன்கு வருமானத்தை அதிகரிக்க உதவும் என்பதோடு, மேலும் அதிக உற்பத்தி வாய்ப்புகள் உள்ள பகுதிகளில் குறிப்பாக ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானாவில் அதன் உற்பத்தியை மிகவும் அதிகரிப்பதற்காக ஒரு நல்ல உத்வேகத்தை அளிக்கும்.
- கடந்த ஆண்டு, நாட்டில் 3.05 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் மஞ்சள் சாகுபடி செய்யப் பட்டது.
- மஞ்சள் உற்பத்தியானது 10.74 லட்சம் டன்கள் ஆக உள்ளது அல்லது உலகளாவிய மஞ்சள் உற்பத்தியில் 70 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.
- இந்தியாவில் 30 வகையான மஞ்சள் உற்பத்தி செய்யப்படுகிறது.
- உலக வர்த்தகத்தில் 62 சதவீதத்திற்கும் அதிகமான பங்கைக் கொண்ட உலகின் மிகப் பெரிய மஞ்சள் உற்பத்தியாளர், நுகர்வோர் மற்றும் ஒரு ஏற்றுமதியாளராக இந்தியா உள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில், சுமார் 226.5 மில்லியன் டாலர் மதிப்பிலான 1.62 லட்சம் டன் மஞ்சள் மற்றும் மஞ்சள் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.
- இதில் NTB வாரியத்திற்கான நிதி மற்றும் உள்கட்டமைப்பை வழங்கும் தலைமைத் துறையாக வர்த்தக அமைச்சகம் விளங்கும்.

## இந்தியா-சவுதி அரேபியா ஹஜ் ஒப்பந்தம்




- இந்தியா சவுதி அரேபியாவுடன் ஒரு ஹஜ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது, இதன் மூலம் 2025 ஆம் ஆண்டிற்கான சுமார் 1,75,025 யாத்ரீகர்களுக்கான பயண ஒதுக்கீட்டை இந்தியா பெற்றுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான ஹஜ் கொள்கையின் படி, இந்தியாவின் மொத்த ஹஜ் பயண ஒதுக்கீட்டில் 30% அல்லது 52,507 இடங்கள் தனியார் ஹஜ் குழு அமைப்பாளர்களுக்கு (HGOs) ஒதுக்கப்படும்.
- மற்ற 70% இடங்கள் ஆனது இந்திய ஹஜ் குழுவால் (HCoI) கையாளப்படும்.

## தன்பாலின திருமணம் குறித்த மறு ஆய்வு மனு

- தன்பாலின திருமணத்தினைச் சட்டப்பூர்வமாக்குவதற்கு மறுத்த 2023 ஆம் ஆண்டு

அக்டோபர் மாதத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பை (சுப்ரியோ எதிர் இந்திய ஒன்றியம்) மறு பரிசீலனை செய்யக் கோரிய மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

- ❖ முன்னதாக, உச்ச நீதிமன்றம் பெரும்பான்மை நீதிபதிகளின் தீர்ப்பில் தன்பாலினத் தம்பதிகள் திருமணம் செய்து கொள்வதற்காக நிபந்தனையற்ற உரிமையைக் கோர முடியாது என்று கூறியது.
- ❖ இந்த விவகாரம் மீதான சட்டம் இயற்றும் பொறுப்பை நாடாளுமன்றத்திடம் உச்ச நீதிமன்றம் வழங்கியிருந்தது.
- ❖ அரசியலமைப்பு சட்டமானது, திருமணத்தினை அடிப்படை உரிமையாக அங்கீகரிக்க வில்லை என்றும் அது தீர்ப்பளித்தது.
- ❖ ஆனால் தன்பாலினத் திருமணங்களைத் தவிர்ப்பதற்கு 1954 ஆம் ஆண்டின் சிறப்பு திருமணச் சட்டம் ஆனது அரசியலமைப்பிற்கு முரணானது அல்ல என்றும் அமர்வில் உள்ள ஐந்து நீதிபதிகளும் ஒப்புக்கொண்டனர்.
- ❖ 1954 ஆம் ஆண்டின் சிறப்பு திருமணச் சட்டம் ஆனது, தனது தனிப்பட்ட சட்டத்தின் கீழ் திருமணம் செய்து கொள்ள முடியாத தம்பதிகளுக்கு மட்டுமே உரிமையியல் திருமண விதிகளை வழங்குகிறது.




## EmpowHER Biz முன்னெடுப்பு

- ❖ சமீபத்தில், சில்லறை விற்பனை தொழில் துறையில் பெண் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்காக வேண்டி EmpowHER Biz - சப்னோ கி உதான் எனும் ஒரு முன்னெடுப்பானது தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ இந்த முன்னெடுப்பின் கீழ், சுமார் 18 முதல் 35 வயதுடைய ஐம்பது பங்கேற்பாளர்கள், குறிப்பிட்ட அளவுருக்களின் அடிப்படையில் இயங்கலை விண்ணப்பச் செயல்முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
- ❖ இந்தப் பங்கேற்பாளர்களில் முதல் இருபது பேர் புதியக் கடை உரிமையாளர் மீதான கட்டணத்தில் 100% தள்ளுபடி பெறுவார்கள்.
- ❖ டெல்லி தேசிய தலைநகரப் பிராந்தியம், பஞ்சாப், இராஜஸ்தான், உத்தரப் பிரதேசம்,

ஹரியானா, மத்தியப் பிரதேசம் மற்றும் குஜராத்தைச் சேர்ந்த பெண்களுக்காக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

- அதிக நெருக்கடி மிக்க பகுதிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் எரிவாயு நிலையங்களில் அமைந்துள்ள சுமார் 200க்கும் மேற்பட்ட சிறு சில்லறை விற்பனைக் கடைகளின் வலையமைப்பை இது கொண்டுள்ளது.




## பாரத் தூய்மை ஆற்றல் உற்பத்தி தளம்




- மத்திய அரசானது புது டெல்லியில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு பாரத பருவநிலை மன்றத்தில் பாரத தூய்மை ஆற்றல் உற்பத்தி தளத்தினை அறிமுகப்படுத்தியது.
- இது சூரிய சக்தி, காற்று, ஹைட்ரஜன் மற்றும் மின்கலச் சேமிப்புத் துறைகளில் இந்தியாவின் மிகத் தூய்மையான தொழில்நுட்ப மதிப்புச் சங்கிலிகளை மேம்படுத்தச் செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.
- உலகளாவிய தூய்மையான தொழில்நுட்பச் சந்தையில் இந்தியாவின் நிலையை மிக நன்கு வலுப் படுத்துவதே இந்த தளத்தின் நோக்கமாகும்.

- நிதியுதவி மற்றும் வளங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக என்று வணிகங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை இது ஊக்குவிக்கிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## வருடாந்திர இந்திய நிதித் தொழில்நுட்பம் குறித்த அறிக்கை 2024

- அமெரிக்கா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக நிதி தொழில் நுட்பப் பிரிவில் பெறப்பட்ட நிதிகளின் அடிப்படையில் இந்தியாவானது உலகளவில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் மொத்தம் 1.9 பில்லியன் அமெரிக்க டாலர்கள் திரட்டப்பட்டதுடன், நிதித் தொழில்நுட்பத்தில் குறிப்பிடத்தக்க சரிவுப் பதிவானது.
- இது 2023 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 2.8 பில்லியன் அமெரிக்க டாலர் நிதியிலிருந்து 33 சதவீதம் குறைவாகும்.
- இந்தத் துறையானது 2022 ஆம் ஆண்டில் சுமார் 5.6 பில்லியன் அமெரிக்க டாலர்களை திரட்டியது.
- 2024 ஆம் ஆண்டில் மணி வியூ மற்றும் பெர்ஃபியோஸ் என்ற இரண்டு யூனிகார்ன் நிறுவனங்கள் தோன்றின.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## விண்வெளியில் செயற்கைக்கோள் இணைப்பு

- இஸ்ரோ நிறுவனமானது விண்வெளியில் இரண்டு செயற்கைக்கோள்களை மிகவும் வெற்றிகரமாக இணைத்துள்ளதன் மூலம் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக இத்தகையச் சாதனையினைப் படைத்த நான்காவது நாடாக இந்தியா மாறியுள்ளது.

- ஸ்பேடெக்ஸ் (விண்வெளியில் செயற்கைக்கோள் இணைப்பு) திட்டமானது, PSLV என்ற விண் ஏவுகலத்தினால் விண்ணில் ஏவப்பட்ட இரண்டு சிறிய செயற்கைக்கோள்களை இணைப்பதற்கான தொழில்நுட்பச் செயல்விளக்கத் திட்டமாகும்.
- இஸ்ரோ நிறுவனமானது டிசம்பர் 30 ஆம் தேதியன்று SDX01- சேஸர் மற்றும் SDX02 ஆகிய இரண்டு சிறிய விண்கலங்களை விண்ணில் ஏவியுள்ளது.
- இந்தத் திட்டத்தில், முதலில் இரண்டு செயற்கைக் கோள்களும் இடையில் 20 கிலோ மீட்டர் என்ற தொலைவிலான இடைவெளியுடன், சேஸர் செயற்கைக்கோள் ஆனது இரண்டு விண்கலங்களின் இறுதி இணைப்பிற்கு முன்னதாக, 5 கி.மீ, 1.5 கி.மீ, 500 மீ, 225 மீ, 15 மீ மற்றும் 3 மீ என தொலைவினைக் குறைப்பதன் மூலம் இலக்கு நிர்ணயிக்கப் பட்ட செயற்கைக்கோளை நெருங்கியது.




## முதல் தனியார் செயற்கைக்கோள் தொகுப்பு

- பெங்களூருவில் உள்ள விண்வெளி சார் புத்தொழில் நிறுவனமானது, இந்தியாவிற்கு முதல் தனியார் புவி வரைபடமாக்கல் செயற்கைக்கோள் தொகுப்பினை வழங்கி வரலாறு படைத்துள்ளது.
- 'ஃபயர்ஃபிளை' எனப்படும் இந்த தொகுப்பானது பிக்சல் நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டதாகும்.
- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், அந்த நிறுவனமானது 'சகுந்தலா' எனப்படுகின்ற இந்தியாவின் முதலாவது தனியார் துறை அதி நிறமாலைப் புவி வரைபடமாக்கல் செயற்கைக் கோளினை விண்ணில் ஏவியது.
- ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் ஃபால்கன்-9 ஏவுகலத்தினைப் பயன்படுத்தி மூன்று 'ஃபயர்ஃபிளை' செயற்கைக் கோள்கள் 550 கிலோமீட்டர் தொலைவிலான புவி தாழ்

மட்ட சுற்றுப்பாதையில் ஏவப்பட்டன.

- 'ஃபயர்ஃபிளைஸ்' என்பது தற்போது உலகின் மிக உயர்ந்த தெளிவுத் திறன் கொண்ட அதி நிறமாலையிலான வணிக செயற்கைக்கோள் ஆகும்.
- இஸ்ரோ நிறுவனமானது விண்வெளியில் 52 வெவ்வேறு செயற்கைக் கோள்களைக் கொண்டுள்ளது.




# மாநிலச் செய்திகள்

## கான்-ஞாய் 2025




- டெல்லி தேசியத் தலைநகரப் பிராந்தியத்தின் ரோங்மெய் என்ற பெண்கள் கலாச்சார நடனக் குழுவானது (RWCDT) 2025 ஆம் ஆண்டு கான்-ஞாய் திருவிழாவினைக் கொண்டாடியது.

- இந்த முக்கியத் திருவிழாவானது ரோங்மெய் நாகா பழங்குடிச் சமூகத்தின் கலாச்சாரப் பாரம்பரியத்தையும் அடையாளத்தையும் எடுத்துக் காட்டுகிறது.
- இந்தத் திருவிழாவானது "Our Festival, Our Identity" என்ற கருத்துருவின் கீழ் நடைபெற்றது.

# முக்கிய தினங்கள்

## மூத்த ஆயுதப்படை வீரர்கள் தினம் - ஜனவரி 14

- ஆயுதப்படை வீரர்களின் தன்னலமற்றக் கடமை மற்றும் தியாகங்களுக்காக வேண்டி அவர்களுக்கு மரியாதை செலுத்துவதையும், இத்தகையத் துணிச்சலானவர்களின் மிக நெருங்கிய குடும்பத்தினர்களுடனான ஒற்றுமையை வலுப்படுத்துவதையும் இது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதலாவது மூத்த ஆயுதப்படை வீரர்கள் தினம் ஆனது 2017 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 1953 ஆம் ஆண்டு இந்த நாளில் தான், சுதந்திரத்திற்குப் பிறகு இந்திய இராணுவத்தின் முதல் தளபதியாக இருந்த பீல்ட் மார்ஷல் K.M.கரியப்பா அவரது மகத்தான ராணுவச் சேவைக்குப் பிறகு ஓய்வு பெற்றார்.




## 77வது இந்திய இராணுவ தினம் - ஜனவரி 15

- 1949 ஆம் ஆண்டில் இந்த நாளில் தான், பீல்ட் மார்ஷல் கரியப்பா, ஜெனரல் சர் FRR புச்சரை அடுத்து இந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதியாகப் பொறுப்பேற்றார்.
- இந்த நாள் ஆனது சவாலானச் சூழ்நிலைகளில் தொடர்ந்து பணியாற்றிய இந்திய இராணுவ வீரர்களின் தைரியம், வீரம் மற்றும் தியாகத்தினை நினைவு கூர்கிறது.
- 77வது இராணுவ தின அணிவகுப்பில் 52 மதிப்புமிக்க விருதுகள் வழங்கப் பட்டன.
- இதில் 8 மரணத்திற்குப் பிந்தைய விருதுகள் உள்ளிட்ட 15 சேனா பதக்கங்கள் (வீர தீர விருதுகள்) மற்றும் 37 இராணுவத் தலைமைத் தளபதி (COAS) பிரிவு விருதுகள் ஆகியன

அடங்கும்.


77th ARMY DAY
INDIAN ARMY
FORGING THE FUTURE
15th January 2025

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★